FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

~~(குற்றவியல் நடைமுறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

Under Section 173 BNSS

C 8108576

1. District : Chennai — PS: V&AC, CC-V — Year: — FIR No: 1/2025/AC/CC-V — Date: 19.11.2025
   மாவட்டம் — காவல்நிலையம் — ஆண்டு — முத.அ. எண் — நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption — Sections பிரிவுகள்: U/S 7
   (ii) Act சட்டம்: (Amendment) Act 2018. — Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS — Sections பிரிவுகள்: U/S 106
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 19.11.2025 Date to : 19.11.2025
   குற்ற நிகழ்வு நாள் — நாள் முதல் — நாள் வரை
   Time Period : Time from : 00.35hrs Time to : 06.00hrs
   நேர அளவு — நேரம் முதல் — நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 19.11.2025 Time : 10.30hrs
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) Time :
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — நேரம்

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o The Regional Transport Officer, Poonamallee check post, Nazarathpet, Chennai-123. 21 kms West
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : (b) Address :
   முறைக் காவல் எண் — முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. Kannan (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. :
   நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue :
   வழங்கப்பட்ட நாள் — வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : (g) Address : Special Tahsildar, Land Acquisition, National Highways, Unit-1, Thiruvallur, (On the Instructions of District Inspection Cell Officer), Kanchipuram.
   தொழில் — முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. S. Chandran, Motor Vehicle Inspector, Poonamallee Check Post, Nazarathpet, Chennai. 600123.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   - No delay -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS .....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Informed and Sent the copy through Post

19/11/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

19.11.2025 @ 12.30hrs

Name: பெயர் K. Bindhu, Inspector of Police
Rank: நிலை ..... No. எண் .....

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

FIR CONTENTS IN VIGILANCE AND ANTI CORRUPTION, CHENNAI CITY – V DETACHMENT, CR.NO.01/2025, 7 OF PREVENTION OF CORRUPTION (AMENDMENT) ACT 2018 AND 106 BHARATIYA NAGARIK SURAKSHA SANHITA.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு - 5 ன் ஆய்வாளர் கி.பிந்து ஆகிய நான் 19.11.2025 அன்று 10.30 மணியளவில் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது திரு. கொ.கண்ணன், தனி வட்டாட்சியர், (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை, தொகுதி-1, திருவள்ளூர், (காஞ்சிபுரம் மாவட்டம் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில்) என்பவரிடமிருந்து பெற்ற புகார் மனுவினை திரு.தி.கந்தசாமி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப்பரிவு - 5, சென்னை அவர்கள் மனுவை பரிசீலனை செய்து உத்தரவு பெற்று மனுவின் தன்மைக்கேற்ப வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய அறிவுறுத்தியதன் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை சென்னை நகரப்பிரிவு - 5 ன் குற்ற எண்.01/2025 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தப்பட்டது) சட்டம் 1988 மற்றும் BNSS பிரிவு 106 ஆகிய பிரிவுகளின் கீழ் இன்று 19.11.2025, 11.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன், மனுவின் விபரம் பின்வருமாறு

From, K.Kannan, Special Tahsildar, Land Acquisition, National Highways, Unit-1, Thiruvallur. To, The Deputy Superintendent of Police, Chennai City-V, Vigilance and Anti- Corruption, Alandur, Chennai-16., Lr.No.357/I2/2025, dated.19.11.2025, Sir, Sub: Joint Surprise Check conducted on 19.11.2025 at Regional Transport Office, Poonamallee Check Post, Nazarathpet, Chennai – 600123 – Report - forwarded – reg. **<<<<>>>>** I state that on the instruction of Kancheepuram District Inspection cell Officer, a joint surprise check was conducted at the O/o the Regional Transport Office, Poonamallee Check Post, Nazarathpet, Chennai – 600123 Thiruvallur District along with the Deputy Superintendent of Police, V & AC, CC – V Detachment, Chennai and their team on 19.11.2025 between 00.35 hrs and 06.00 hrs. During the joint surprise check an unaccounted cash of Rs.1,72,500/- (Rupees One lakh seventy two thousand five hundred Only) was found and seized. I am herewith sending the proceedings drawn during the time of Joint Surprise Inspection conducted on 19.11.2025 and the unaccounted cash seized during the Surprise Check (Rs.1,72,500/-) along with the 9 -statements of persons who

were present at the time of Surprise Check, for further course of action. Enclosure 1)Original Proceeding, dt.19.11.2025, 2)Unaccounted cash of Rs.1,72,500/-, 3) 9-Statements. Kindly acknowledge receipts of the same. SD/-- K.Kannan, Special Tahsildar, Land Acquisition, National Highways, Unit-1, Thiruvallur. SD// K.Kannan, Special Tahsildar, Land Acquisition, National Highways, Unit – 1, Thiruvallur. Inspector Tmt.K.Bindhu, For n/a SD//19/11/2025 DSP, CC-V, V&AC, Chennai – 16. Received the letter and registered a case in V&AC Chennai City-V Cr.No.01/2025 u/s 7 of the Prevention of Corruption Act 1988 (Amendment) and 106 BNSS Sd//-K.BINDHU, INSPECTOR OF POLICE/CC-V, 19.11.2025. இணைப்பில் உள்ள இருதுறை கூட்டுத்தணிக்கை அறிக்கை பின்வருமாறு

திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு - V காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று 19.11.2025 வட்டார போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி சோதனை சாவடி, நசரத்பேட்டை, சென்னை-600123 அலுவலத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கை.

இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்:	(1) திரு. கொ.கண்ணன், தனி வட்டாட்சியர், (நில எடுப்பு) தேசிய நெடுஞ்சாலை, தொகுதி-1, திருவள்ளூர் (காஞ்சிபுரம் மாவட்டம் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில்) (2) திரு.T. கந்தசாமி, காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-V, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

	(3) திருமதி.K. பிந்து, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-V, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

வட்டார போக்குவரத்து அலுவலகம், பூந்தமல்லி சோதனை சாவடி, நசரத்பேட்டை, சென்னை அலுவலகத்தில் உள் மற்றும் வெளி சரக்கு வாகனங்களை அனுமதிக்க வரிவசூல் செய்யும் போது அதிக தொகை பெற்றுக் கொண்டு ஓட்டுநர்களிடம் லஞ்ச பணம் பெற்று கொண்டு அனுமதிப்பதாக, கிடைத்த நம்பகமான இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி சோதனைசாவடி மற்றும் அலுவலகத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் அவர்களின் உத்தரவின் பேரில் திரு.கோ.கண்ணன் தனி வட்டாட்சியர், நில எடுப்பு மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-V, காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் மற்றும் பார்டி சகிதம் இணைந்து இன்று (19.11.2025) அதிகாலை சுமார் 00.35 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனை சாவடியானது சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை பூந்தமல்லி, நசரத்பேட்டையில் அமைந்துள்ளது. மேற்படி சோதனை சாவடியில் தமிழ்நாட்டில் இருந்து பெங்களூரு கர்நாடகா மாநிலம் செல்லும் வாகனங்களை சோதனை செய்ய ஒரு சாவடியும், கர்நாடகா மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்கு வரும் வாகனங்களை சோதனை செய்ய ஒரு சாவடியும் உள்ளது. ஆனால் இந்த இரண்டு சோதனை சாவடிம் ஒரே இடத்திலேயே (சோதனை சாவடி எண்.123) இயங்கி வருகிறது. இதில் தீடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த சோதனையின் போது கீழ்கண்ட அலுவலர்கள் பணியில் இருந்தனர்.

1) திரு.ச.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர், பூந்தமல்லி சோதனை சாவடி, நசரத்பேட்டை, சென்னை-600123.
2) திரு.ப.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாரின் வாகன ஓட்டுநர் மற்றும் உறவினர். (Private Individual)
3) திரு.வீ.ரவி, உதவியாளர் (தற்காலிக பணி) (Private Individual)
4) திரு.கு.பூபாலன், கணினி ஆப்பரேட்டர், (தற்காலிக பணி) (Private Individual)
5) திரு.அ.குமரன், வழிகாட்டி (தற்காலிக பணி) (Private Individual)
6) திரு.கு.மேகன்ராஜ், உதவியாளர் (தற்காலிக பணி) (Private Individual)
7) திரு.பா.சதீஷ்குமார், வழிகாட்டி (தற்காலிக பணி) (Private Individual)

மேலே குறிப்பிட்டுள்ள அலுவலர்களில் திரு.ச.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர், திரு.வீ.ரவி, உதவியாளர் மற்றும் திரு.பூபாலன், கணினி ஆப்பரேட்டர் சோதனை சாவடி அலுவலில் இருந்தார்கள்.

திரு.அ.குமரன், வாகன வழிகாட்டி, திரு.பா.சதீஷ்குமார், வாகன வழிகாட்டி மற்றும் திரு.கு.மேகன்ராஜ், உதவியாளர் ஆகியோர் சாலையில் நின்று வாகனத்தை நிறுத்தி சோதனை சாவடிக்கு அனுப்பி வைத்துக்கொண்டிருந்தனர்.

திரு.ப.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளரின் சொந்த நான்கு சக்கர வாகன (TN 21 BR 2255) ஓட்டுநர் ஆவண பாதுகாப்பு அறையின் உள்ளே இருந்தார்.

மேற்படி சோதனை சாவடிகளை சோதனை செய்த போது சோதனை சாவடியில் கணினி வைக்கப்பட்டிருந்த மேஜையின் வலது பக்க டிராயரில் ரூபாய் 1,73,127/- ரொக்க பணம் காணப்பட்டது.

இந்த பணத்தை பற்றி கேட்க அந்த பணம் 18.11.2025 காலை 08.00 மணியிலிருந்து 19.11.2025 அதிகாலை 00.35 மணிவரை வசூலிக்கப்பட்ட வரி இனக்க கட்டணம் மற்றும் தற்காலிக அனுமதி சீட்டு கட்டணம் என்று திரு.சந்திரன்,

மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் திரு. பூபாலன், கணினி ஆப்பரேட்டர் கூறினார்கள். அதற்குண்டான System Generated user wise transaction details ஐ சரிபார்த்தபோது ரூபாய் 2,63,251/- தொகை இருக்க வேண்டும் என்று தெரிய வந்தது. ஆனால் ரூபாய் 90,124/- குறைவாக இருந்தது. அதைப்பற்றி அவர்களிடம் கேட்டபோது திரு.பூபாலன் இது 9 புதிய மோட்டார் வாகனங்களுக்கு டாக்ஸ் ரிசிப்ட் போடப்பட்டு அதற்கான தொகை பெறப்படவில்லை என்றும், மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சந்திரன் அவர்களின் உத்தரவின் பேரிலேயே வரித்தொகை பெறாமலேயே இந்த 9 ரிசிப்ட் போடபட்டதாகவும் கூறினார். இந்த ரிசிப்டை சம்மந்தப்பட்ட வாகன உரிமையாளர்களுக்கு வாட்ஸ்அப் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு அதற்கான தொகையை காலை 08.00 மணிக்குள் செலுத்திவிடுவார்கள் என்று திரு.சந்திரன் கூறினார். மேலும் அவரே சம்மந்தப்பட்ட நபரை அவரது மொபைலில் இருந்து (மொபைல் எண்.7812892627) சுமார் அதிகாலை 01.20 மணியளவவில் தொடர்பு கொண்டு பணத்தை இப்பொழுதே செலுத்திவிடும்படி கூறினார். அதன்படி திரு.எம்.எஸ்.பிரபாகரன் என்பவர் சோதனை சாவடிக்கு வந்து ஜோகல் டிரான்ஸ்போர்ட்டின் Chassis வாகன ரிசிப்டிற்கு உண்டான வரித்தொகை ரூபாய் 15,224/- செலுத்திவிட்டு சென்றார். மற்றும் திரு.ஏழுமலை என்பவர் சோதனை சாவடிக்கு வந்து டைம்லர் என்ற கம்பெனிக்கு உண்டான 8 Chassis வாகனங்களின் ரிசிப்பிட்டிற்கு உண்டான மொத்த தொகை ரூபாய் 74,700/- ஐ செலுத்தி அதற்கான ரிசிப்டுகளை பெற்று சென்றார்.

ஆனால் திரு.பூபாலன் கூறியதை சரிபார்க்க வேண்டி அவரின் மொபைலின் (மொபைல் எண். 8072303482) வாட்ஸ்ஆப்பை காண்பிக்க சொல்லி பார்த்தபோது, ஏழுமலை செஸ் பாரத் பென்ஸ் என்ற பெயரில் பதிவு செய்துள்ள எண்.7339649998

ற்கு 8 ரிசிப்டின் மொத்த தொகை ரூபாய் 74,700/- என்று 18.11.2025 இரவு 11.13 pm க்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது மற்றும் மொபைலில் (மொபைல் எண் 9092708073) பிரபா துளசி செஸ் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்த நபருக்கு 18.11.2025 அன்று இரவு 09.48 pm க்கு அனுப்பப்பட்டு அதற்கான தொகையை இங்கு ஓட்டுநராக பணிபுரியும் திரு.பழனி கார்த்திகேயனுக்கு ஜி - பே எண்.9786656686 (UPI ID Palanikarthick.pk6@okhdfcbank) மூலம் ரூபாய் 15,224/- 18.11.2025 இரவு 11.49pm க்கு திரு.பிரபாகரன் என்பவர் அவரது ஜி.பே யுபிஐ ஐடி mspvickey48-2@okhdfcbank அனுப்பப்பட்டுள்ளது. இதைப்பற்றி கேட்கும்போது அவர்கள் கூறிய விளக்கம் முன்னுக்கு பின் முரணாக இருந்தது. மேலும் சரிபார்க்கப்பட்ட 58 ரெசிப்ட்கடின் வரித்தொகை மொத்தம் ரூபாய் 2,63,251/- அரசாங்க பணம் என்பதால் திரு.சந்திரன், மோட்டார் வாகன ஆய்வாளர் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி சோதனை சாவடியை தணிக்கை செய்த போது மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் மேஜையில் சிசி டிவி மானிட்டர் வைக்கப்பட்டிருந்தது, அந்த போக்குவரத்து சோதனை சாவடியில் ஆங்காங்கே மறைத்து வைக்கப்பட்டிருந்த கீழ்கண்ட கணக்கில் வராத ரொக்க பணம் கைப்பற்றப்பட்டது.

வ.எண்.	ரூபாய் நோட்டுகளின் விபரம் மற்றும் எண்ணிக்கை	மொத்தம்
1.	500 x 345	1,72,500

அந்த பணத்தைப்பற்றி கேட்க திரு.சந்திரன மற்றும் அலுவலில் இருந்த பிற நபர்கள் மேற்கண்ட ரொக்க பணத்தை பற்றி சரியான விளக்கம் கூறவில்லை. எனவே இந்த பணம் லஞ்ச பணம் என்று உறுதியானதால் அப்பணம் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களின் பேண்ட் பாக்கெட்டில் சோதனை செய்தபோது ரூ.8,000/- இருந்தது. அது அவருடைய சொந்த பணம் என்றும் அந்த தொகையை Cash in Hand Registtter ல் பதிவு செய்திருப்பதாக கூறினார். அதனை சோதனை செய்தபோது சரியாக இருந்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் தற்காலிக பணியாளர்களை ஒவ்வொருத்தராக சோதனை செய்ய அவர்கள் தங்களிடமிருந்த பணத்தை எடுத்து விசாரணைக்கு ஆஜர் செய்தனர்.

வ.எண்.	பெயர்	தொகை
1	திரு.ப.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாரின் வாகன ஓட்டுநர்	ரூபாய் 600/-
2	திரு.வீ.ரவி, உதவியாளர்	ரூபாய் 100/-
3	திரு.கு.பூபாலன், கணினி ஆப்பரேட்டா	ரூபாய் 260/-
4	திரு.அ.குமரன், வழிகாட்டி	ரூபாய் 600/-
5	திரு.கு.மேகன்ராஜ், உதவியாளர்	ரூபாய் 210/-

இந்த பணத்திற்கு உண்டான விளக்கத்தை கேட்க அவர்கள் இந்த பணம் தினசரி செலவுக்காகவும் போக்குவரத்து செலவுக்காகவும் அவசர செலவுக்காகவும் வைத்திருந்ததாக கூறினர். அவர்கள் சொன்ன காரணம் ஏற்றுகொள்ளும்படி இருந்ததால், ஒவ்வொருவரும் வைத்திருந்த பணம் ரூ.1000/- கீழ் இருந்ததாலும் மேற்படி அலுவலகர்கள் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி பணத்தை அந்தந்த நபர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலகத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்த ஆவணங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆவணங்கள் முறையாக 19.11.2025 வரை பராமரிக்கப்பட்டு வந்தது. அதில் எந்த குறைபாடும் இல்லை.

S.No	Registers	Maintenance Details
1	Cash Book Register.	Maintained from 01.01.2025 to 18.11.2025
2	Vehicle Movement Register.	Maintained from 17.09.2025 to 17.11.2025
3	Bank Challen Register	Maintained from 01.11.2025 to 18.11.2025
4	Omni Bus Tax Register	Maintained from 19.05.2025 to 17.11.2025.
5	Demand Draft Register	Not Maintained
6	1% Maintenance Watch Register	Maintained from 27.08.2025 to 18.11.2025.
7	Receipt Challan Register.	Maintained 30.09.2024 to 18.11.2025.
8	Main Cash Book	Maintained from 19.05.2025 to 17.11.2025.
9	JTC / RTO Inspection Notes	Maintained from 03.01.2025 to 16.11.2025.
10	Attendence Register	Maintained from 01.01.2025 to 18.11.2025.
11	Daily Duty Roster	Maintained from 01.01.2025 to 18.11.2025.

கீழ்கண்ட ஆவணங்களின் நகல்கள் திரு. கொ.கண்ணன், தனி வட்டாட்சியர், (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை, தொகுதி-1, திருவள்ளூர், (காஞ்சிபுரம் மாவட்டம் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில்) மற்றும் திரு.சந்திரன் மோட்டார் வாகன ஆயவாளர் அவர்களின் கையொப்பம் பெற்று மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலகத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்த ஆவணங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இந்த ஆவணங்கள் முறையாக 19.11.2025 வரை பராமரிக்கப்பட்டு வந்தது. அதில் எந்த குறைபாடும் இல்லை.

S.No	Registers	Maintenance Details
1	Cash Book Register.	Maintained from 01.01.2025 to 18.11.2025
2	Vehicle Movement Register.	Maintained from 17.09.2025 to 17.11.2025
3	Bank Challen Register	Maintained from 01.11.2025 to 18.11.2025
4	Omni Bus Tax Register	Maintained from 19.05.2025 to 17.11.2025.
5	Demand Draft Register	Not Maintained
6	1% Maintenance Watch Register	Maintained from 27.08.2025 to 18.11.2025.
7	Receipt Challan Register.	Maintained 30.09.2024 to 18.11.2025.
8	Main Cash Book	Maintained from 19.05.2025 to 17.11.2025.
9	JTC / RTO Inspection Notes	Maintained from 03.01.2025 to 16.11.2025.
10	Attendence Register	Maintained from 01.01.2025 to 18.11.2025.
11	Daily Duty Roster	Maintained from 01.01.2025 to 18.11.2025.

கீழ்கண்ட ஆவணங்களின் நகல்கள் திரு. கொ.கண்ணன், தனி வட்டாட்சியர், (நில எடுப்பு), தேசிய நெடுஞ்சாலை, தொகுதி-1, திருவள்ளூர், (காஞ்சிபுரம் மாவட்டம் ஆய்வுக்குழு அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில்) மற்றும் திரு.சந்திரன் மோட்டார் வாகன ஆயவாளர் அவர்களின் கையொப்பம் பெற்று மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

1) System generated user wise transaction details for the period from 18.11.2025 at 08.00 hrs to 19.11.2025 at 00.35 hrs.
2) Copy of 9 Invoices along with receipts amounting to Rs.90,120/-
3) Copy of attendence Register for the month of November 2025.
4) Copy of cash in hand register for 18.11.2025.
5) Printout of G pay payment from Tr.Prabhakaran to Tr.P.Karthikeyan for a payment of Rs.15,224/- UPI transaction ID 114350183369 attested by Tr.Karthikeyan.

இந்த இருதுறை திடீர் கூட்டுத்தணிக்கை இன்று (19.11.2025) காலை சுமார் 06.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி , உரிய முறையில் முடிக்கப்பட்டது.

ஒப்பம்//
திரு. கொ.கண்ணன்,
தனி வட்டாட்சியர், (நில எடுப்பு)
தேசிய நெடுஞ்சாலை,
தொகுதி-1, திருவள்ளூர்
(காஞ்சிபுரம் மாவட்டம் ஆய்வுக்குழு
அலுவலர் அவர்களின் உத்தரவின்பேரில்)

ஒப்பம்//
திரு.T. கந்தசாமி,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சென்னை நகரப் பிரிவு-V,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்//
திருமதி.K. பிந்து,
காவல் ஆய்வாளர்,
சென்னை நகரப் பிரிவு-V,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒப்பம்//
திரு.ச.சந்திரன்,
மோட்டார் வாகன ஆய்வாளர், பூந்தமல்லி
சோதனை சாவடி, நசரத்பேட்டை,
சென்னை-600123.

The original FIR in DVAC Crime No. 01/2025/AC/CC-V, dated: 19.11.2025 U/s.7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 and 106 BNSS along with original 1. Complaint vide Lr. No. 357/I2/2025

dated.19.11.2025, 2. Proceedings drawn by Tr. K.Kannan, Special Tahsildar (Land Acquisition), National Highways, Thiruvallur (on the instructions of District Inspection Cell Officer, Kancheepuram District) during joint surprise check on 19.11.2025 between 00.35 hrs to 06.00 hrs, 3. Original Tamil Statements of 9 Witnesses, 4. System generated user wise transaction details for the period from 18.11.2025 at 08.00 hrs to 19.11.2025 at 00.35 hrs., 5.Copy of 9 Invoices along with receipts amounting to Rs.90,120/-, 6. Copy of attendance Register for the month of November 2025, 7.Copy of cash in hand register for 18.11.2025, 8. Printout of G pay payment from Tr.Prabhakaran to Tr.P.Karthikeyan for a payment of Rs.15,224/- UPI transaction ID 114350183369 attested by Tr.Karthikeyan, 9. Form 91 (I 0999251) and 10. Unaccounted cash of Rs.1,72,500/- seized during joint surprise check is submitted to the Hon'ble Principal District Judge, Thiruvallur and the other copy of FIR is sent to DVAC, Headquarters for information and for record.

Inspector of Police,
Chennai City – V,
Vigilance and Anti-Corruption,
Alandur, Chennai – 16.